**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**முன்னிலை :** திரு. சு. கோபாலக்கண்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாரூர்.

2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 06 ஆம் நாள் சனிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2050, ஸ்ரீவிகாரி வருடம் ஆனி மாதம் 21-ஆம் நாள்)

**அசல் வழக்கு எண். 01/2019**

K. நடராஜன் ..... வாதி

//எதிர்//

அ. பத்மா .... பிரதிவாதி

=====

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 02.07.2019 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். ஆர். அய்யப்பன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு, பிரதிவாதி அழைக்கப்பட்டு வருகையில்லாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதப்பட்டும் வாதி தரப்பு வாதுரையைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து இன்று (06.07.2019) இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

**1.** தாவா தொகையான ரூ.76,195/=ஐ, பிரதிவாதியிடமிருந்து பின்வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் வசூலிக்க இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரையின் சுருக்கம்:-**

வாதியிடம் பிரதிவாதி வாதி வீட்டில் கடந்த 03.10.2016-ம் தேதியன்று மாதம் ஒன்றுக்கு 100-க்கு ரூ.1 வீதம் வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு ரூ.60,000/-த்தை கடனாகப் பெற்றுக்கொண்டு வேண்டும் போது கொடுப்பதாக ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்துள்ளார். தாவா கடனுறுதிச்சீட்டின் அசல் வட்டி, கூடுதல் தொகைகளை கொடுத்து தீர்க்கும்படி வாதி பிரதிவாதியிடம் பல தடவைகள் நேரில் கேட்டும் கொடுக்கவில்லை என்பதால் வாதி 15.02.2018-ஆம் தேதியில் பிரதிவாதிக்கு தொகை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டு பிரதிவாதி தொகை கொடுக்காமலும், பதில்

அறிவிப்பு கொடுக்காமலும் இருந்து வந்ததால் தாவா தொகையை வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் செலுத்த வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, சார்வு செய்யப்பட்டு பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், அழைக்க ஆஜராக தவறியதாலும் தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டு வாதி தரப்பு சாட்சியம் இந்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

**4.** வாதி தரப்பில் வாதி, வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டும், தாவா புரோ நோட்டை எழுதி பூர்த்தி செய்ததாக வா.சா.2 விசாரிக்கப்பட்டும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** <u>வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது.</u>

வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள வாதி நிரூபண வாக்குமூலத்தில் வழக்குரையின் அம்சங்களை அனுசரித்துள்ளார். பிரதிவாதி 03.10.2016-ம் தேதியன்று மாதம் ஒன்றுக்கு 100-க்கு ரூ.1 வீதம் வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு ரூ.60,000/-த்தை கடனாகப் பெற்றுக்கொண்டு கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துள்ளார். இதனை வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டின் விபரக் கூறுகள் அனுசரிக்கின்றன. மேலும், வா.சா.ஆ.1 கடனறுதிச்சீட்டு வா.சா.1 மற்றும் வா.சா.2-ன் சாட்சியங்கள் வாயிலாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், தாவாத் தொகையை கேட்டு வாதி வா.சா.ஆ.2 அறிவிப்பை அனுப்பியுள்ளார். அதனை பிரதிவாதி 17.02.2018-ம் தேதியில் பெற்றுக்கொண்டுள்ளார். இதனை வா.சா.ஆ.3 அனுசரிக்கிறது. மேலும், பிரதிவாதி இவ்வழக்கில் ஆஜராகியும், வாதி தரப்பு வழக்கை முரண்படுத்தும் விதமாக எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. மாறாக, நீதிமன்றத்தில் அழைக்க ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

வா.சா.1-ன் சாட்சியத்திலும், வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்களின் அடிப்படையிலும், பிரதிவாதி, வாதியிடம் கடந்த 03.10.2016 ஆம் தேதியன்று ரூ.60,000/-ம் கடனாக பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 ஆன

கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்பது தெளிவாகிறது. மேலும், வா.சா.ஆ.1-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை பிரதிவாதி இதுவரை செலுத்தவில்லை என்பது வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில், பிரதிவாதி தாவாக் கடனை வட்டியுடன் மீள செலுத்தக் கடமைப்பட்டவர் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**6.** முடிவாக,

இவ்வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, தாவாவில் வாதி கோரிய ரூ.76,195/- தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த தேதியான (02.01.2019) முதல் தீர்ப்பாணை தேதியான (06.07.2019) வரை ஆண்டிற்கு 9% வட்டியுடனும், தீர்ப்பாணைக்கு மறுநாள் (07.07.2019)ஆம் தேதியிலிருந்து தொகை கொடுத்து தீர்க்கப்படும் தேதி வரையில் 6% வட்டியுடனும் பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

ஒம்/- (சு. கோபாலக்கண்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.

<u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி:</u>

| | | |
|---|---|---|
| 1. | வா.சா.1 | நடராஜன் (வாதி) |
| 2. | வா.சா.2 | ராகவன். |

<u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் :</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 03.10.2016 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு | அசல் |
| வா.சா.ஆ.2 | 15.02.2018 | வாதி வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 17.02.2018 | பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |

<u>பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்,</u>
<u>பிரதிவாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> -இல்லை-

ஒம்/- (சு. கோபாலக்கண்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**முன்னிலை :** திரு. சு. கோபாலக்கண்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாரூர்.
2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் நாள் சனிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2050, ஸ்ரீவிகாரி வருடம் ஆனி மாதம் 21-ஆம் நாள்)

**அசல் வழக்கு எண். 01/2019**

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தாலுக்கா, திருவாரூர் நகரம், திருவாரூர் புது தெருவில் இருந்து வரும் கருப்பண்ண கவுண்டர், குமாரர் 61 வயதுள்ள கே. நடராஜன். ..... வாதி

**// எதிர் //**

நீடாமங்கலம் தாலுக்கா, நீடாமங்கலம் டி.மு. இலாக்கா, முன்னவர் கோட்டை அஞ்சல், முன்னவர் கோட்டை கீழ தெருவில் இருந்து வரும், சத்துணவு சமையல் வேலைபார்க்கும், அன்புமணி மனைவி, 40 வயதுள்ள அ. பத்மா. ..... பிரதிவாதி

====

தாவா தொகையான ரூ.76,195/=ஐ, பிரதிவாதியிடமிருந்து பின்வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் வசூலிக்க இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கலான தேதி : 02.01.2019

தாவா கோப்பில் எடுக்கப்பட்ட நாள் : 02.01.2019.

தாவா மூலம் : 03.10.2016, 15.02.2018 மற்றும் 17.02.2018 ஆகிய தேதிகளில் திருவாரூரில் உற்பத்தி.

**தாவா மதிப்பு**

தாவா தொகையான ரூ.76,195/-க்கு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 22-ன்படி நீதிமன்றக் கட்டணமாக ரூ.2,286/- செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 02.07.2019 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். ஆர். அய்யப்பன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு, பிரதிவாதி அழைக்கப்பட்டு வருகையில்லாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதப்பட்டும் வாதி தரப்பு வாதுரையைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து இன்று (06.07.2019) இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்பாணை

1. இவ்வழக்கு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. தாவாவில் வாதி கோரிய ரூ76,195/- தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த தேதியான (02.01.2019) முதல் தீர்ப்பாணை தேதியான (06.07.2019) வரை ஆண்டிற்கு 9% வட்டியுடனும், தீர்ப்பாணைக்கு மறுநாள் (07.07.2019)ஆம் தேதியிலிருந்து தொகை கொடுத்து தீர்க்கப்படும் தேதி வரையில் 6% வட்டியுடனும் பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
3. வாதி தரப்பு தாவா செலவுத்தொகையான ரூ.3,937/-ஐ வாதிக்கு பிரதிவாதி கொடுக்க வேண்டும்.

(பிரதிவாதி தரப்பில் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் இல்லை )

## செலவுத் தொகை விபரம்

வாதி தரப்பில்

| | | |
|---|---|---|
| வழக்குரையில் நீதிமன்ற கட்டணம் | : | Rs. 2286.00 |
| வக்காலத்து | : | Rs. 5.00 |
| படிமெமோ | : | Rs. 9.50 |
| தட்டச்சு செலவு | : | Rs. 100.00 |
| வழக்கறிஞர் ஊதியம் | : | Rs. 1536.95 |
| **கூடுதல்** | : | **RS. 3937.45** |
| **முழுமையாக்கப்பட்ட தொகை** | : | **RS. 3937/-** |

2019-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

ஒம்/- (சு. கோபாலக்கண்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.